**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 660/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : வேடமுத்து | **Caste** | : | | |
| **Father's Name** | : நாகராஜ் | **Calling** | : | போட்டி தேர்வுக்கு தயார் ஆகிவருகிறேன். |
| **Village** | : தேவநாயக்கன்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | **Age** | : | 21 |
| | | **Dated** | : | **09.09.2025** |

**09.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு. **வேடமுத்து** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் தேவநாயக்கன்பட்டி குடியிருந்து . போட்டி தேர்வுக்கு தயார் ஆகிவருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த ரஞ்சித் குமார் எனது அண்ணன்எனது அண்ணன் ரஞ்சித்குமார் சென்ரிங் வேலை செய்து வந்தார்.ரஞ்சித்குமார் கடந்த 14.02.2025ம் தேதி வழக்கம் போல் அவரது இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்றார். அன்று மாலை சுமார் 5.00 மணிக்கு எனது அம்மா எனக்கு போன் செய்து எனது அண்ணன் ரஞ்சித்குமார் வேலை முடித்துவிட்டு வத்தலகுண்டு பைபாஸ்யில் இருந்து பழனி பைபாஸ் நோக்கி சர்விஸ் ரோட்டில் தெற்கு

இருந்து வடக்கு நோக்கி முத்தழகு பட்டி பிரிவு அருகே வந்துக்கொண்டிருந்தபோது ஈச்சர் வாகனம் வடக்கு இருந்து தெற்கு நோக்கி வந்து எனது அண்ணன் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாக தகவல் சொன்னார். தகவல் கேள்விப்பட்டு நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். எனது அண்ணனுக்கு கழுத்து , தலை , கை கால்களில் காயம் பட்டிருந்தது. எனது அண்ணனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள் பின்னர் இது சம்மந்தமாக நானும் எனது அம்மாவும் மறுநான் காலை போலிசில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

எனது அம்மா எனக்கு தகவல் சொன்னபோது நான் எங்கிருந்தேன் என்றால் மருத்துவமனையில் இருந்தேன். இறந்த எனது அண்ணனின் உடல் மாலை 5.00 மணிக்கு மருத்துவமனைக்கு வந்துவிட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் குறித்து எனக்கு தெரியும். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.09 17:25:45 +0530

Judicial Magistrate No.I

Dindigul.